ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1426/19 – 2006 ජනවාරි 05 වැනි බ්‍රහස්පතින්දා – 2006.01.05
*1426 / 19 ஆம் இலக்கம் – 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

*( அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது )*

# பகுதி III – காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : மஹ/ஆ/07/12/பரி/7/II பாகம்.
வரைபட இல. : 3709.

மேலே குறிப்பிட்ட காரணத்தின்படி 1999.12.10 ஆம் திகதி இல. 1109/21 உடைய இலங்கை சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள எனது குறிப்பும் 1999.09.27 ஆம் திகதியுடைய அறிவித்தலுக்கு உமது அவதானத்தை செலுத்தப் பட்டுள்ளது.

அறிவித்தலின் படி 2000.08.02 ஆம் திகதிக்கு நியமமாய் இருந்த உரிமை பற்றிய பரிசீலனை 2006.03.10 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மஹவெவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் நடைபெறும்.

மேலும் அதன் உரிமை பற்றிய விபரங்கள் எழுத்து மூலம் இரண்டு பிரதிகளில் 2006.03.03 ஆம் திகதிக்கு முன் எனக்கு அறிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

என்.ஏ.ஏ.பீ.எஸ். நிஸ்ஸங்க,
பிரதேச செயலாளர்,
மஹவெவ.

பிரதேச செயலகம்,
மஹவெவ,
2005.12.26.

01 – 476

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 978/03/05/01/22.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் : -

சபரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கொலொன்ன பிரதேச செயலாளர் பிரிவில், கொலொன்ன கோரளையில், கொலொன்ன கம்பத்துவெயில், கேல்ல கிராம சேவகப்பிரிவில் இல. 905 ம் கடைசி கிராம வரைபடத்தில் அமைந்துள்ள நில அளவை அத்தியட்சகரினால் தயார் செய்யப்பட்ட இல. ஆர்/கேஎல்என்/2005/105 ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு இல. 1005 :

**துண்டு இல. 1005**
காணியின் பெயர் : மெதகொடேவத்த ; உரிமை கோருபவரின் பெயர் ; டி.வி.ஆர். திசாநாயக, இல. 03, மீகஹவத்தை வீதி, கங்கொடவில, நுகேகொட ; விஸ்தீரணம் : 0.767 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2006 ஆம் ஆண்டு 02 ஆம் மாதம் 16 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கொலொன்ன பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2006 ஆம் ஆண்டு 02 ஆம் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எம். ஏ. ரி. சௌரத்,
பிரதேச செயலாளர்,
கொலொன்ன.

பிரதேச செயலகம்,
கொலொன்ன,
2005.12.30.

01 – 475

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.